5. அறிவிப்பு.

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு (செனட்) கீழ்க்கண்ட இரு மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத்தாள்கள் வரப்பெற்றன.

(1) டாக்டர் ஜெ. பரந்தாமன்

(2) திரு. டி. சுதர்சனம்

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் மேற்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

6. கவன ஈர்ப்பு

(அ) ஆண்டிப்பட்டித் தொகுதியிலும், பெரியகுளம் தொகுதியிலும் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சில கிராமங்களில் கொடிக்கால் விவசாயத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் கே. தவசி, மற்றும் எம். பெரியவீரன் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு.கே. தவசி.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிப்பட்டி தொகுதி, ஜெயமங்கலம், மேல்மங்கலம், வடுகப்பட்டி ஆகிய கிராமங்களிலும், பெரியகுளம் தொகுதி, பெரியகுளம், தாமரைக்குளம், சின்னார்பட்டி ஆகிய கிராமங்களிலும், . புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கொடிக்கால் விவசாயத்திற்கு நிவாரணம் வழங்குவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி மற்றும் பெரியகுளம் பகுதிகளில், நவம்பர் 1993ல் அடித்த புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக்கால் பரப்பு விவரம் வருமாறு:

		பரப்பு (எக்டர்)
பெரியகுளம்	-	7.00
மதுரை வடக்கு	-	8.00
வாடிப்பட்டி	-	238.00
உத்தமபாளையம்	-	9.77
மொத்தம்	-	262.77

பாதிக்கப்பட்ட மொத்த பரப்பில், சிறு/குறு விவசாயிகளுக்கு நிவாரணமாக 245 எக்டர் பரப்பிற்கு ரூ. 7.35 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட வெற்றிலை கொடிக்கால் விவசாயிகளுக்கு நிவாரணமாக வேப்பம் பிண்ணாக்கு - 122.50 டன்களும் காப்பர் ஆக்ஸி குளோரைடு - 750 கிலோவும் வழங்க தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

மேலும், மதுரை மாவட்ட கொடிக்கால் விவசாயிகளின் கோரிக்கையின்படி வேப்பம் பிண்ணாக்கிற்கு பதிலாக, கடலைப் பிண்ணாக்கு வழங்க தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு, இதுவரை 40 டன்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வழங்கப்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட சிறு/குறு விவசாயிகள் 1097 பேர்களுக்கு நிவாரணம் பெறுவதற்கான அனுமதிச் சீட்டுகளும் (Permit) வழங்கப்பட்டு நிவாரணப்பணி நடைபெற்று வருகிறது. மேலும் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்திடமிருந்து கடலைப் பிண்ணாக்கு முழுவதும் பெறப்பட்டு 30.3.94க்குள் நிவாரணப்பணிகளை முழுமையாக முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். கொடிக்கால் விவசாயிகளுக்கு நிவாரணம்கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொடிக்கால் விவசாயிகள், - கொடிக்கால் நோயால் பாதிக்கப்பட்டு—அந்த வெள்ளத்திற்குப் பின்பு கொடிய நோயால் பாதிக்கப்பட்டு இரண்டு ஆண்டுக்காலம் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

அவர்கள் கூட்டுறவு வங்கிகள் மூலமாக பெற்ற கடன்களை ஜப்தி செய்யாமல் இருப்பதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு பரிந்துரை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட பெருமழையாலும், வீசிய வலிவுடைய புயலாலும், பல்வேறு மாவட்டங்களிலே வேளாண்மைப் பயிர்கள் நாசம் அடைந்தன. அதே நேரத்தில் மதுரை மாவட்டத்திலே ஏறத்தாழ 262.77 ஹெக்டேர் நிலங்களில் கொடிக்கால் வெற்றிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொடிக்கால் வெற்றிலையை மீண்டும், அந்த விவசாயிகள் பயிரிடுவதற்கு வேண்டிய இடுபொருட்களை, தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 7.35 லட்சத்திற்கு வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். மீண்டும் அந்த விவசாயிகள் தங்களுடைய வேளாண்மைப் பணிகளைத் துவங்குவதற்கு, வேளாண்மைத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள், அந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டு, தகுந்த ஆலோசனைகளை அங்குள்ள விவசாயிகளுக்கு வழங்கி வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதனைப் போலவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பிய வினாவை உங்கள் வாயிலாக அறிகின்றபோது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். எனவே, நானும் அவர்களும் கலந்து பேசி, அரசால் என்ன செய்யமுடியுமோ, அதைச் செய்வதற்கு புரட்சித் தலைவி அரசு என்றும் தயாராக இருக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். பெரியவீரன்.

நண்பகல் 12.00

திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணத்தினாலே பல நூற்றுக்கணக்கான கொடிக்கால் விவசாயிகள் பெரும் சேதங்களுக்கு உட்பட்டு, அந்த மழையினால் பாதிக்கப்பட்ட காலம் தொட்டு இன்று வரைக்கும் மாற்றுக் கொடிக்கால் அமைத்தாலும்கூட, கொடிய நோயினால் அந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டு, கோடிக்கணக்கான இழப்புக்கு ஆளாகியுள்ளார்கள். கடந்த ஆண்டு இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களையும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் நேரடியாக தொடர்புகொண்டு அந்த விவசாயிகளை மீட்பதற்கு ஏதேனும் வழிவகை உண்டா என்று கேட்டபோது அது சம்பந்தப்பட்ட அலுவலர்களை அந்தப் பகுதியிலே அழைத்து, அனுப்பிவைத்து ஆராய்ச்சி செய்து, அந்த நோயைப் போக்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்தும்கூட, அந்த

நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் அந்தப் பகுதியில் அந்த வேளாண்மையைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு பல இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்தக் கொடிக்கால் தொழிலை ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் செய்து வந்திருந்தாலும்கூட இன்றையதினம் பல தரப்பு மக்களும் அந்தத் தொழில் நல்ல வருவாய் ஈட்டக் கூடிய தொழில் என்று அனைவரும் பணப் புழக்கமுள்ள இந்தப் பயிரைப் பயிரிட்டு பல லட்சக்கணக்கான பணத்தை முதலீடு செய்கின்ற இந்தத் தொழில் மிகவும் மோசமான நிலையில் எந்த ஒரு கொடிக்காலும் நிலையில்லாத நிலையில் பூராவுமே ஒட்டுமொத்தமாக அழிந்துவிட்ட காரணத்தாலே அமைச்சரவர்கள் இன்று அறிக்கையில் கொடுத்துள்ள இந்த வேப்பம் பிண்ணாக்குக்குப் பதிலாக கடலைப் பிண்ணாக்கு போன்ற சில உரங்களை மானியமாக இனாமாகக் கொடுத்து உதவியுள்ளோம் என்று கொடுத்துள்ளார்கள். ஆனால் அந்தப் பிண்ணாக்குகளையெல்லாம் பயன்படுத்துவதற்குகூட வாய்ப்பு இல்லாமல் கொடிக்கால் வெள்ளாமை முழுமையாக அழிந்துவிட்ட காரணத்தால்.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எம். பெரியவீரன்: அதற்கு ஏதேனும் ஒரு மறுவாழ்வு ஏற்படுத்துவதற்கு அரசிடமிருந்து உதவிகள் தரப்படமுடியுமா என்று கேட்டுக் கொண்டு, அது முடியாத நிலையில் குறுகிய காலக் கடனாகக் கொடுத்த கடனை தள்ளுபடி செய்து, அந்த விவசாயிகளுக்கு மறுவாழ்வு அளிக்க அரசு முன்வருமா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே வெற்றிலைப் பயிர்கள் பெருமளவில் பயிரிடக் கூடியவைகள், மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம், ஓரிசா, குஜராத், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு. இந்த மாநிலங்களிலே தமிழ்நாடு நீங்கலாக, பெருமழையோ, புயல் அடித்தாலோ, அல்லது நோயின் தன்மையால் இந்த வெற்றிலைக் கொடிக்கால் முழுவதுமாக பாதிக்கப்பட்டாலோ, எந்த மாநிலத்திலேயும், யாரும் எந்தவிதமான நிவாரணமும் இதற்கு இதுவரையில் தந்ததில்லை. ஆனால் தமிழகத்திலே மட்டும்தான் நம்முடைய ஒப்பற்ற புரட்சித் தலைவி அவர்கள் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய நலனைப் பாதுகாக்கவேண்டுமென்பதற்கு (குறுக்கீடு) தமிழகத்திலே 2 ஆண்டுக்காலம் வெள்ள நிவாரண இடு பொருட்களை புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதனை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே மதுரை மாவட்டத்திலே பெரியகுளம் போன்ற பகுதிகளில் வெற்றிலை கொடிக்கால் பயிரிடக்கூடிய விவசாயிகள் தொடர்ந்து அதே பயிரை பயிரிட்டு வருவதனால் அந்த நிலத்திலே, அந்த மண்ணிலே குறிப்பிட்ட சத்துக்கள் குறைகிறது என்பதைத்தான் இன்றைக்கு

வேளாண்மைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மண் ஆய்வு செய்து அறிக்கைகள் தந்திருக்கிறார்கள். எனவே அங்கேயுள்ள விவசாயிகளுக்கு நாங்கள் வெற்றிலைக் கொடிக்காலை இரண்டு வருடங்களுக்குப் போடாமல் மற்ற பயிரைக் பயிரிடுங்கள். அதே நேரத்திலே குறைவாக உள்ள அந்தச் சத்துக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையிலே அரசினுடைய அலுவலர்களின் பரிந்துரையின் பேரிலே நீங்கள் தொழு உரம் இடவேண்டும், பசுந்தாள் உரம் இடவேண்டுமென்ற அறிவுரையும் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த விவசாயிகள் அதனைச் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அரசாங்க அலுவலர்களினுடைய பரிந்துரையின் படி அவர்களுக்கு வேப்பம் பிண்ணாக்கு தரவேண்டுமென்று நாங்கள் பரிந்துரை செய்தோம். ஆனால் அங்கேயுள்ள விவசாயிகள் எங்களுக்கு கடலைப் பிண்ணாக்குத்தான் வேண்டுமென்று கேட்டார்கள். அதையும் அரசாங்கம் வழங்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். ரொம்ப விரிவாகப் போக வேண்டாம். நேரமாகிவிட்டது.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: எனவே வேளாண் பெருங்குடி மக்களுடைய அனைத்து விருப்பங்களையும் இந்த அரசு அறிந்து, புரிந்து, அனைத்து நடவடிக்கையும் எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெரியவீரன், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பல வகையிலே அவர்கள் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் மறு விவசாயம் செய்வதற்குக் கூட அவர்கள் இயலாத நிலையில் உள்ளதால் இந்த அரசு குறுகிய காலக் கடனாகக் கொடுத்ததை தள்ளுபடி செய்து அவர்கள் மேலும் வளர்ச்சி அடைவதற்கு ஏதேனும் அரசின் மூலம் கடனுதவி பெறுவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12.05

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனைத் தள்ளுபடி செய்கின்ற பொறுப்பு வேளாண்மைத் துறை அமைச்சரிடத்திலே இல்லை. அதற்கு வேண்டிய பரிந்துரைகள் வருவாய்த்துறை அமைச்சர் மூலமாக வந்து, முதலமைச்சருடைய கவனத்திற்குச் சென்று, நிதிநிலைமைக்கு ஏற்றவாறு அரசு பரிசீலிக்கும்.